உ

சிவமயம்

பஞ்ச மூர்த்திகள் தோத்திரமும்

கோயிலூர்

ஸ்ரீ ஆண்டவர் போற்றிப் பத்தும்

[120 ஆவது ஆண்டுக் குருபூசை விழாவுமலர்]

*

இயற்றியவர் :

கருப்பக்கிளர்

திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

*

கோ. ஆ. பொ. மடாலய வெளியீடு

பொருள் வைத்த சேரி

சிக்கல்

1968

உ

சிவமயம்

பஞ்ச மூர்த்திகள் தோத்திரமும்

கோவிலூர்

ஸ்ரீ ஆண்டவர் போற்றிப் பத்தும்

[120 ஆவது ஆண்டுக் குருபூசை நினைவுமலர்]

⁂

இயற்றியவர்:

கருப்பக்கிளர்

திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

⁂

கோ. ஆ. பொ. மடாலய வெளியீடு

பொருள் வைத்த சேரி

சிக்கல்

1968



கோயிலூர் ஆண்டவர் என்னும்
ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க
ஞானதேசிகரவர்கள்

உ

பஞ்ச மூர்த்திகள் தோத்திரம்



விநாயகர்

அருந்தவர் துதிக்கும் ஒற்றைவெண் கொம்பு
அழகிரு பதமுமும் மதமும்
பரந்தநாற் புயமும் நீண்டவைங் கரமும்
படர்தரு மாறுமா முகமும்
விரிந்தநன் மார்பும் கண்டமும் இடையும்
விளங்குபீ தாம்பர உடையும்
திருந்திய பணியும் காண்பனோ? செல்வா!
சிறந்தநல் ஆனைமா முகனே.

முருகக்கடவுள்

ஐங்கரன் துணைவா சங்கரன் புதல்வா
 அம்பிகை பெற்றிடுங் குமரா
பங்கய மலரில் இருந்திடும் பிரமன்
 பணிந்திடும் பதமலர் முடியில்
தங்கிட என்று தரிப்பதோ அறியேன்
 சற்குரு வடிவமாய் வந்தென்
பங்கம தகற்றி உய்ந்திடும் படியே
 பாகதி அளித்தல்உன் கடனே. 2

சிவபெருமான்

பரமசற் குருவாய் அன்றுநால் வருக்குப்
 பழமறைப் பொருளினை உணர்த்தி
அரங்கர் விழியார் மயக்கெலாம் ஒழித்த
 ஆதியே நீதியை உணர்ந்து
கரவுகொண் டிருந்த நெஞ்சனும் உய்யக்
 கருணைவைத் தாளுநாள் உளதோ?
சுரர்முனி பரவுஞ் சிவபெரு மானே!
 சோதியாய் விளங்கிய சுடரே. 3


உமையவள்

அன்னையே அடியேன் அடைக்கலம் புகுந்தே
அடியிணை தன்னையே சூட்டி
என்னையுங் காத்தல் நின்கடன் ஆகும்
இமயமா மலைதனில் உதித்த
கன்னியே உனது கருணையே அன்றிக்
கடையனேன் செயலொன்றுங் காணே
உன்னத மாகக் கடவுளோர் பாகம்
உற்றிருந் தருள்புரி உமையே.

சண்டேசுரர்

அன்னையும் பிதாவும் அரனுடன் உமையு
அன்றிவே றில்லையென் றெண்ணி
உன்னத மான பேரன்பு கொண்டே
உளத்தினில் சிவத்தையே இருத்தித்
தன்னுரு வெல்லாஞ் சிவனுரு ஆகிச்
சனனமாங் கடலினைக் கடந்தோய்
என்னையாட் கொள்வாய் கனிந்தநல் அன்ப
ஈசனே திருச்சண்டே சுரனே.

திருவருள் துணை



அருளுடைய பரம்பொருளே மன்றி லாடும்
ஆனந்தப் பெருவாழ்வே அன்பு ளோர்தம்
தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட
சிவமேமெய் யறிவுருவாந் தெய்வ மேயிம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தியாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை
ஏற்றுவதற் கெண்ணுகவென் இன்பத் தேவே.

—இராமலிங்க அடிகள் திருவருட்பா

உ

குருவே துணை

கோயிலூ ராண்டவர் போற்றிப் பத்து



காப்பு

நேரிசை வெண்பா

ஏரார் சமிவனத்தில் எஞ்ஞான்றுங் கோயில்
கொண்
ஆராருங் கோயிலூ ராண்டவனும்—நேரார்
திருமுத்து ராமலிங்க தேசிகனைப் போற்றக்
கரிமுகஞ்சே ரைங்கரனே காப்பு.

நூல்

அறுசீராசிரிய விருத்தம்

சீர்திகழும் பாண்டிவள நாடதிலே
  பெருமையினுற் சிறப்புற் ருேங்கும்
பேர்திகழுங் காரைநகர் தனில்வைசிய
  குலமதனிற் பெட்புற் ருேங்கித்
தார்திகழும் மெய்யப்பன் எனவுயர்ந்த
  ஒருவனது தவத்தால் வந்த
கார்திகழும் புகழ்முத்து ராமலிங்க
  தேசிகனுர் கழல்கள் போற்றி. (௧)

இளம்பருவந் தனிலடக்கங் கல்விபொறை
  யாதியன யியையப்பெற்றே
விளம்பருநல் வீடடைய விரும்பிமிக
  உகந்தலிங்க மேலோற் போற்றி
வளம்பெருகு மாதவனய் மாபுகழ்சேர்
  கோயிலூர் மன்னி நின்ற
தளம்பெருகு சீர்முத்து ராமலிங்க
  தேசிகனுர் தாள்கள் போற்றி. (௨)

அருளுருவாய்த் தோன்றியுயர் வேதாந்தம்
தமிழகத்தில் அதிக மோங்கத்
தெருளுருவாய் அடியவர்க்கு மறைமுடிவைப்
புகட்டியருள் சீர்த்தி வாய்ந்து
மருளறுநல் மாதவனாய் மாபுகழ்சேர்
கோவிலூர் மடத்தைக் கண்ட
இருளறுநல் மணிமுத்து ராமலிங்க
தேசிகனார் இருதாள் போற்றி. (ந

கொப்புடைய சுந்தரியாம் காரைநகர்க்
கோயிலமர் குலதெய் வந்தான்
வெப்புடைய வினைதுயர் அகற்றிடுவான்
மேவிவந்து அருளே செய்யின்
தப்பில்புகழ் ஆண்டவனின் தனிப்பெருமை
யாமெடுத்துச் சாற்றற் பாற்றோ?
ஒப்பில்புகழ் திருமுத்து ராமலிங்க
உத்தமனின் உயர்தாள் போற்றி. (ச

கருணைமிது பலபெரியோர் தமையழைத்துப்
  போற்றுதற்கென் சதுரா யெண்ணி
அருணையீ சானியரை ஆரூர்வாழ்
  தென்முகத்து அடிகள் தம்மைக்
கருணைமிகு பெரியோர்கள் மற்றுமுள
  பேர்களையும் கதிக்கச் சேர்த்து
அருணயக்கும் பெருமுத்து ராமலிங்க
  தேசிகனார் அடிகள் போற்றி. (௫)

கருப்பணியிவ் வுலகடைந்த சீவர்களின்
  அஞ்ஞானக் கட்டைப் போக்க
விருப்பமுட னிறையமரும் பதிகளிலே
  யொன்றாக மிளிரு நல்ல
கருப்பொலியுங் கோயிலூர்த் திருத்தளி
  தக்கபடி அழகு நீடத் [யைத்
திருப்பணிசெய் அருள்முத்து ராமலிங்க
  தேசிகனார் திருத்தாள் போற்றி. (௬)

தெய்வங்கள் பெயராலே பலவெனினும்
அவைகளெலாஞ் சிந்தை செய்து
மெய்வருநூல் விதிநாட ஒன்றுகும்
மெய்ம்மைதனை விளங்கத் தேர்ந்து
கைவருமா பெருந்தெய்வஞ் சிறுதெய்வம்
அனைத்தையுமே கனமாய்க் கொண்டு
செய்வருமா திருமுத்து ராமலிங்க
தேசிகனர் திருத்தாள் போற்றி. (எ

அருமறைகள் ஒருநான்கும் அறிவிக்கும்
முடிவதனை அகிலத் தோர்க்குத்
தருமவுரை யாப்பகர்ந்து பிறவிநோய்
தனைத்தடுக்கத் தரணி மீது
வருமடிகள் கோயிலூர் மடமேவு
திருவடிகள் மாண்பு மிக்க
திருமறைநூல் தருமுத்து ராமலிங்க
தேசிகனர் திருத்தாள் போற்றி. (அ

செயற்கரிய செய்வார்கள் பெரியோர்கள்
இவ்வுலகிற் சிறியோர் தாமும்
செயற்கரிய செய்யாரென் றோதுமறை
சிறப்படையச் செட்டி நாட்டில்
செயற்கரிய செய்துறைந்த கோயிலூர்
ஆண்டவனுந் தேசி கேசன்
செயற்கரிய திருமுத்து ராமலிங்க
தேசிகனர் திருத்தாள் போற்றி. (௯)

உகந்தலிங்கப் பேர்பெறுநல் உத்தமனே
முதலாக வுலக வாழ்க்கை
இகந்தரிய மெய்ஞ்ஞானத் திருநெறியி
லேகமாய் இயைந்து நின்று
மகந்தருநற் பெரியோர்கள் அனைவோருங்
கோயிலூர் மன்னி மேவச்
சுகந்தருநன் மாமுத்து ராமலிங்க
மாமுனிவன் துணைத்தாள் போற்றி. (௰)

சுபம்.

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.